செ.வெ.எண்.753 நாள்.22.04.2023

**கடந்த 21–4–2023 அன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தொழிலாளர் நலத்துறை சட்ட முன்வடிவு குறித்து தொழிற்சங்கங்களுடன் மாண்புமிகு அமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டம்.**

கடந்த வெள்ளிக்கிழமை (21–4–2023) அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் "2023–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச் ) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் .8/2023)" தாக்கல் செய்யப்பட்டது . இந்த சட்டமுன்வடிவினுடைய முக்கிய அம்சங்கள் குறித் தும், ஒன்றிய அரசின் தொழிலாளர் நல சட்டத்திலிருந்த தற்போது தமிழ்நாடு அரசு முன்மொழிந்திருக்கும் இந்தச் சட்டம் எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பதை விளக்கிக் கூறி, இந்தத் திருத்தத்தால் தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக வரக்கூடிய முதலீடுகள் மற்றும் பெருகும் வேலைவாய்ப்புகள் குறித்தும், சட்டமன்றத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும் , மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் விரிவாக விளக்கம் அளித்தார்கள்.

இருப்பினும், இந்த மசோதா குறித்து தொழிலாளர் சங்கங்கள் சில கருத்துக்களைத் தெரிவித்து வருவதால் வரும் 24–4–2023 (திங்கள்கிழமை) அன்று மதியம் 3–00 மணிக்கு தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் , மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் , மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர் , தலைமைச் செயலாளர் , தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தொழிலாளர் நலத் துறை ஆணையர் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய தொழிற்சங்கங்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

****

வெளியீடு இயக்குநர். செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600009.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in